**<u>சார்பு நீதிமன்றம், பரமத்தி</u>**

முன்னிலை – திரு.ஜி.பிரபாகரன், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2023–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் நாள் செவ்வாய்கிழமை

<u>ஐ.எ,எண்05/2023</u>
<u>இன்</u>
<u>ஓ.எஸ்.எண்.80/2022 (CNR No.TNNM10003222022)</u>

1) ஐயப்பன் (எ) வீரன்
2) கமலேஸ்வரன் ...மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

// எதிரிடை//

சீனிவாசன் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது, என் முன்பாக இன்று 31.10.2023–ம் தேதியில், இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரர்களுக்காக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு.டி.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு..பி.கே.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் இதர ஆவணங்கள் படித்து பார்க்கப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**<u>உ த் த ர வு :–</u>**

மனுதாரர்களால், இம்மனுவானது, வழக்குரையில் கண்ட சொத்தும், மனுச்சொத்து விபரத்தில் கண்ட சொத்துமானதை, எதிர்மனுதாரர் எவ்விதமான வில்லங்கங்களுக்கும் ஆட்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, சி.பி.சி. கட்டளை 39, விதி 01, 02 மற்றும் பிரிவு 151–ன் கீழ், எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

<u>2) மனுச்சுருக்கம்:–</u>

i) எதிர்மனுதாரரால், மூலவழக்கானது, விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி, மனுதாரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. முதலாவது மனுதாரரின் குமாரர் தான், இரண்டாம் மனுதாரர். முதலாவது மனுதாரரின் தகப்பனார் ராசைய்யன் (எ) மருதகண்டரின் வளர்ப்பு மகன் தான் எதிர்மனுதாரர் ஆவார். மனுச்சொத்துக்களும் மற்றும் வேறு பல சொத்துக்களும் முதலாவது மனுதாரரின் தகப்பனாருக்கு, கடந்த 17.09.1981–ம் தேதிய. பதிவு பாகப்பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டு, அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. அதனால், மனுச்சொத்துக்களில், முதலாவது மனுதாரருக்கும் பங்கிருக்கிறது. இருந்தும், முதலாவது மனுதாரரின் தகப்பனார் மனுச்சொத்துக்கள் முழுவதையும் பொருத்து, கடந்த 12.06.1998–ம் தேதியில், எதிர்மனுதாரருக்கு ஓர் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி, பதிந்து கொடுத்திருக்கிறார். இது, சட்டப்படி ஏற்புடையதல்ல. முதலாவது மனுதாரருக்கு, மனுச்சொத்துக்களில் உள்ள உரிமையை, கடந்த 12.06.1998–ம் தேதிய, தானசெட்டில்மெண்ட் பத்திரம் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

ii) அத்தோடு, முதலாவது மனுதாரரின் தகப்பனார், கடந்த 12.06.1998–ம் தேதியிலேயே ஒரு வீட்டைப்பொறுத்தும், எதிர்மனுதாரருக்கு ஓர் தானசெட்டில் மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார். முதலாவது மனுதாரரின் தகப்பனார், மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றும் முதலாவது மனுதாரரின் தகப்பனாரை, எதிர்மனுதாரர் பராமரிக்கவும் இல்லை என்றும் மேற்படி தானப்பத்திரங்களில் கண்ட சொத்துக்களைப்பொறுத்து பட்டா மாறவும் இல்லை என்றும் மேற்படிச்சொத்துக்களின் சுவாதீனங்களும், முதலாவது மனுதாரரின் தகப்பனார் வசம் தான் உள்ளது என்றும் கூறி, முதலாவது மனுதாரரின் தகப்பனார் மேற்படி இரண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரங்களையும் கடந்த 29.12.2004–ம் தேதியில் ரத்து செய்துவிட்டு, கடந்த 23.04.2008–ம் தேதியில், முதலாவது மனுதாரரின் தகப்பனார், அவரது சொத்துக்களை A, B, C–என பிரித்து, அவைகள் முறையே, முதலாவது மனுதாரர், எதிர்மனுதாரர், இரண்டாவது மனுதாரர் அடைந்து கொள்ளவேண்டியது என்று கூறி, ஓர் உயில் சாசனம் எழுதிவைத்துவிட்டு, கடந்த 06.03.2009–ம் தேதியில் இறந்துபோய்விட்டார்.

iii) அதனடிப்படையில், மேற்படி உயில் சாசனம் நடைமுறைக்கு வந்துவிட்டது. அந்த உயிலின்படி மனுச்சொத்துக்கள் முழுவதும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப் பட்டதல்ல. இருந்தும், மனுச்சொத்துக்களை, எதிர்மனுதாரர் வில்லங்கங்கள் செய்ய முற்படுவதாக கூறி, மனுதாரர்களால் இம்மனுவானது, மேலே கூறிய பரிகாரம் கோரி, எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

3) **<u>எதிருரைச்சுருக்கம்:-</u>**

மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும், இம்மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் அவர்களது மனுவில், சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. மனுதாரர்களின் மனுவில் கண்ட சங்கதிகளை, அவர்களே நிரூபிக்கவேண்டும். மனுதாரர்கள், அவர்களது மனுவில், இந்த நிர் எதிர்மனுதாரர், முதலாவது மனுதாரரின் தகப்பனாரின் வளர்ப்பு மகன் என்று சொல்லியுள்ளது பொய். மனுச்சொத்துக்கள் இந்த நிர் எதிர்மனுதாரரின் தகப்பனாரான, ராசைய்யன் (எ) மருதகண்டருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டச்சொத்தாகும். அதனடிப்படையில், எதிர்மனுதாரரின் தகப்பனார், மனுச்சொத்தைப்பொறுத்து, கடந்த 12.06.1998-ம் தேதியில், எதிர்மனுதாரருக்கு ஓர் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார். அதன்பேரில், மனுச்சொத்துக்களை, இந்த நிர் எதிர்மனுதாரர் பெற்று, அனுபவித்து வருகிறார். மனுச்சொத்துக்களில் விவசாயம் செய்து தான், இந்த நிர் எதிர்மனுதாரர், அவரது மனைவி மற்றும் குடும்பத்தார்களை காப்பாற்றி வருகிறார். மனுச்சொத்திலிருந்து வரும் விவசாயத்தை நம்பித்தான் எதிர்மனுதாரரின் குடும்பத்தினர்கள் இருக்கிறார்கள். மனுதாரர்கள் சொல்வதுபோல், மனுச்சொத்துக்களை இந்த நிர் எதிர்மனுதாரர் வில்லங்கங்கள் ஏதும் செய்ய முயலவில்லை. எதிர்மனுதாரருக்கு வீண் தொந்தரவு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதனால், மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, இந்த நிர் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை</u>::-**

மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றா? அல்லது இல்லையா?

5) <u>பிரச்சினைக்குரிய தீர்வு</u> :–

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இரு தரப்பினர்களின் பரஸ்பர சம்மதத்தின்பேரில் மனுதாரர்கள் தரப்பில், ஆறு சான்றாவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில், ஆறு சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா? அல்லது இல்லையா? என்பது குறித்து பார்க்கும்பொழுது, எதிர்மனுதாரரால், மூலவழக்கானது, முதலாவது மனுதாரரின் தகப்பனார், கடந்த 12.06.1998–ம் தேதியில், எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்திருக்கிற தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை, கடந்த 29.12.2004–ம் தேதியில் ரத்து செய்து, ரத்துப்பத்திரம் எழுதியிருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் அதனால், அது ரத்து செய்யப்படவேண்டிய ஒன்று என்று, ரத்துப்பரிகாரம் கோரியும் மூலவழக்கில் கண்ட சொத்து, எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் காரணபரிகார்த்தமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

6) ம..சா.ஆ.1–கடந்த 17.09.1981–ம் தேதிய, பதிவு பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகலினை உற்றுநோக்கியபொழுது, அது, முதலாவது மனுதாரரின் தகப்பனாருக்கும் மற்றும் வீரப்பக்கண்டர் என்பவருக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற பாகப்பத்திரம் என்று அறிய முடிகிறது. மேற்படி பாகத்தில், முதலாவது மனுதாரரின் தகப்பனாருக்கு மனுச்சொத்துக்கள் B–அட்டவணையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எ.ம.சா.ஆ.1– தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை உற்றுநோக்கியபொழுது, அது, எதிர்மனுதாரரின் தகப்பனாரால், மனுச்சொத்துக்களைப்பொறுத்து, கடந்த 12.06.1998–ம் தேதியில், எழுதி வைக்கப்பட்டிருக்கின்ற செட்டில்மெண்ட் பத்திரம் என்று அறிய முடிகிறது. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில், மனுச்சொத்துக்கள், எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு பாகக்கறார் மூலம் பாத்தியப்பட்டது என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, மனுச்சொத்துக்களில், முதலாவது மனுதாரருக்கு 1/3–பங்கிருக்கிறது என்று அறிய முடிகிறது. இருந்தும், அந்த பங்கையும் சேர்த்து, முதலாவது மனுதாரரின் தகப்பனார், எ.ம.சா.ஆ.1–பத்திரத்தின் மூலம், எதிர்மனுதாரருக்கு தானம் கொடுத்திருக்கிறார்.

7) அதன் செல்லும் தன்மை குறித்து, மூலவழக்கில் தீர்மானிக்கும் வரை, மனுச்சொத்தில், மனுதாரர்களுக்குள்ள 1/3–பங்கை, எதிர்மனுதாரர் எவ்விதமான வில்லங்கங்களுக்கும் ஆட்படுத்தக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது தான்மூலவழக்கில் பல்வேறு பிரச்சனைகள் எழுவதை தவிர்க்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே இந்த பிரச்சனைக்கு, மனுதாரருக்கு பகுதி ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, மனுச்சொத்துக்களில் உள்ள, 1/3–பங்கை எதிர்மனுதாரர், மூலவழக்கு விசாரணை முடியும் வரை எவ்விதமான வில்லங்கங்களுக்கும் ஆட்படுத்தக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. இம்மனுவின் சூழ்நிலை, தன்மை மற்றும் தரப்பினர்களுக்கு இடையே உள்ள உறவுமுறை ஆகியவைகளை கருத்தில் கொண்டு செலவுத்தொகை ஏதுமில்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு, நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2023–ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 31–ம் நாள், செவ்வாய்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

G PRABHAKARAN Digitally signed by G PRABHAKARAN Date: 2023.10.31 16:27:40 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>இருதரப்பிலும் எவ்விதமான வாய்மொழி சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை.</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

1) ம.சா.ஆ.1–17.09.1981–ம் தேதிய பாகப்பிரிவினைப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்.
2) ம.சா.ஆ.2–29.12.2004–ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரத்தின் அசல்.
3) ம.சா.ஆ.3–12.06.1998–ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.
4) ம.சா.ஆ.4–29.12.2004–ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரத்தின் அசல்.
5) ம.சா.ஆ.5–23.04.2008–முதலாவது மனுதாரரின் தகப்பனார் எழுதி வைத்த உயிலின் அசல்.
6) ம.சா.ஆ.6–09.04.2009–ம் தேதிய இறப்புச்சான்றிதழின் சான்றிட்ட நகல்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

1) எ.ம.சா.ஆ.1–12.06.1998–ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல்.
2) எ.ம.சா.ஆ.2–21.01.2020–கணினி சிட்டாவின் பதிவிறக்க நகல்.
3) எ.ம.சா.ஆ.3–அடங்கல் கணக்கின் உண்மை நகல்.
4) எ.ம.சா.ஆ.4–கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றின் நகல்.
5) எ.ம.சா.ஆ.5–தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், பொத்தனூர் வழங்கிய சான்றின் அசல்.
6) எ.ம.சா.ஆ.6–29.12.2004–ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

G PRABHAKARAN
Digitally signed by G PRABHAKARAN
Date: 2023.10.31 16:27:49 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.